அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல:19/99

எனது இல:11/719ஈ25(1),
அரசாங்க நிர்வாக,உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு.
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு-07.

1999.08.03.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,

## ஒழுக்காற்று விசாரணைகளுக்கான கொடுப்பனவுகள்

1981.05.06ஆந் திகதி 365 ஆம் இலக்க, 1982.07.21ஆந் திகதிய 205ஆம் இலக்க, 1985.03.29 ஆந் திகதிய 283ஆம் இலக்க, 1985.06.26ஆந் திகதிய 297 ஆம் இலக்க 1986.12.04 ஆந் திகதிய 355ஆம் இலக்க, 1987.08.14ஆந் திகதிய 377 ஆம் இலக்க, 1988.11.29 ஆந் திகதிய 42/88ஆம் இலக்க, 1993.04.05 ஆம் திகதிய 6/93 ஆம் இலக்கம் மற்றும் 1995.08.29ஆந் திகதிய 6/93(1)ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

02. ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்துவதற்காக செய்யப்படும் கொடுப்பனவுகள் 1999.07.01 ஆந் திகதி தொடக்கம் பின்வரும் முறையில் அமைதல் வேண்டும்.

| | விசாரணையை நடாத்தும் ஒரு மணித்தியாலயத்திற்கான படி | எழுதுநர்/ தட்டெழுத்தாளர்/ தபால் கட்டணங்கள் | இறுதி அறிக்கையும் அதன் பொருளடக்கத்தையும் தயாரித்தல் |
|---|---|---|---|
| (01) விசாரணை உத்தியோகத்தர். | | | |
| I. இளைப்பாறிய | | | |
| (அ) பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக நடாத்தப்படும் விசாரணை: | ரூ.125/- | ரூ.500/- | ரூ.1500/- |
| (ஆ) கீழ் உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக நடாத்தப்படும் விசாரணை: | ரூ.100/- | ரூ.500/- | ரூ.1250/- |
| (இ) சிற்றூழியர் ஒருவருக்கு எதிராக நடாத்தப்படும் விசாரணை: | ரூ.100/- | ரூ.500/- | ரூ.1000/- |
| II. அரச சேவையில் உள்ள | | | |
| (அ) பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக நடாத்தப்படும் விசாரணை: | ரூ.125/- | - | ரூ.1500/- |
| (ஆ) கீழ் உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக நடாத்தப்படும் விசாரணை: | ரூ.100/- | - | ரூ.1250/- |
| (இ) சிற்றூழியர் ஒருவருக்கு எதிராக நடாத்தப்படும் விசாரணை: | ரூ.100/- | - | ரூ.1000/- |
| (02) வழக்குத் தொடுநர்: | | | |
| (அ) பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக நடாத்தப்படும் விசாரணை: | ரூ.100/- | - | ரூ.600/- |
| (ஆ) கீழ் உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக நடாத்தப்படும் விசாரணை: | ரூ.75/- | - | ரூ.450/- |
| (இ) சிற்றூழியர் ஒருவருக்கு எதிராக நடாத்தப்படும் விசாரணை: | ரூ.75/- | - | ரூ.300/- |
| (03) விசாரணையில் பணியாற்றும் தட்டெழுத்தாளர் ஒருவருக்கு/ சுருக்கெழுத்தாளர் ஒருவருக்கு விசாரணை நடாத்தப்படும் ஒரு மணித்தியாலத்திற்கு | ரூ.75/- | - | - |

03. மேல் குறிப்பிட்டுள்ள படிகளுக்கு மேலதிகமாக இளைப்பாறிய விசாரணை உத்தியோகத்தர் ஒருவருக்கு அவர் இளைப்பாறும் போது அரச சேவையில் வகித்த பதவியை அடிப்படையாகக் கொண்டும்;
அரச சேவையில் உள்ள விசாரணை உத்தியோகத்தர் ஒருவருக்கு அவர் வகிக்கும் பதவியை அடிப்படையாகக் கொண்டும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பிரயாணச் செலவுகள் மற்றும் இணைந்த படிகளை பெறுவதற்கு உரித்துண்டு.

04. ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர் ஒருவர் ஒழுக்காற்று விசாரணைக்காக விதித்துரைத்த திகதியில் உரிய நேரத்தில் உரிய இடத்திற்கு வருகைதந்தாலும், அவர் வகை சொல்ல வேண்டி இராத ஓர் விடயம் காரணமாக விசாரணையை வேறொரு திகதிக்கு ஒத்திவைப்பதாயின், முழுமையான ஒரு ஒழுக்காற்று அமர்வுக்காக செலுத்த வேண்டிய தொகையில் சரி அரைவாசி அவருக்கு செலுத்தப்பட வேண்டும்.

பொதுத் திறைசேரியின் ஒத்திசைவுடன் இச் சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

ஒப்பம் / பி.ஏ.சேனாரட்ன

செயலாளர்.

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு.

தசே/